SINCE 2013
# We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

## DAILY CURRENT AFFAIRS APRIL 07

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
| --- | --- | --- |
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | Group I- 06.09.2026<br>151 நாட்கள் மீதம்<br><br>Group II & IIA- 25.10.2026<br>200 நாட்கள் மீதம்<br><br>Group IV- 20.12.2026<br>256 நாட்கள் மீதம் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |



## 1. TODAY NEWS ARTICLES

# தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ் நிராகரிப்பு

புது தில்லி, ஏப். 6: இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களவையில் அளித்த நோட்டீஸை அவைத் தலைவர் ஓம் பிர்லா திங்கள்கிழமை நிராகரித்தார்.

இதே விவகாரம் தொடர்பாக மாநிலங்களவையில் தனியாக அளிக்கப்பட்ட நோட்டீஸை அதன் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நிராகரித்து உத்தரவு பிறப்பித்தார்.

மேற்கு வங்கம் உள்பட பல்வேறு மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு (எஸ்ஐஆர்) பிறகு லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. எஸ்ஐஆர் உள்பட பல்வேறு விவகாரங்களில் மத்திய பாஜக அரசின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுவதாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்து வந்தன.

இதைத் தொடர்ந்து, அவரைப் பதவி நீக்கக் கோரி தீர்மானம் கொண்டுவர மக்களவையில் 130 எம்.பி.க்களும், மாநிலங்களவையில் 63 எம்.பி.க்களும் கையொப்பமிட்டு கடந்த மார்ச் 12-ஆம் தேதி நாடாளுமன்ற இரு அவைகளிலும் நோட்டீஸ் சமர்ப்பித்தனர்.



ஞானேஷ் குமார்

தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் மற்றும் அரசியல் சாசன நம்பிக்கையைப் பேண தவறிவிட்டதாகவும், அரசு நிர்வாகத்தின் ஆதிக்கத்தின்கீழ் செயல்படுவதாகவும் ஞானேஷ் குமார் மீது 7 முக்கியக் குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் சுமத்தின.

இந்நிலையில், இரு அவைகளிலும் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பான நோட்டீஸ்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இரு அவைகளும் தனித்தனியே விளக்கமளித்துள்ளன.

**மக்களவை விளக்கம்:** மக்களவைச் செயலர் உத்பால் குமார் சிங் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மான நோட்டீஸை 130 எம்.பி.க்கள் மக்களவைத் தலைவரிடம் சமர்ப்பித்தனர். அந்த நோட்டீஸில் எம்.பி.க்கள் குறிப்பிட்டிருந்த அனைத்து விவகாரங்களும் கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டது. இதையடுத்து, நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968, பிரிவு 3-இன்கீழ் தனது அதிகாரத்தை பயன்படுத்தி தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்கம் தொடர்பான நோட்டீஸை அவைத் தலைவர் நிராகரித்தார்' எனத் தெரிவிக்கப்பட்டது.

**மாநிலங்களவை விளக்கம்:** மாநிலங்களவைச் செயலர் பிரமோத் சந்திர மோடி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பாக கடந்த மார்ச் 12-ஆம் தேதி 63 எம்.பி.க்கள் அளித்த நோட்டீஸை நீதிபதிகள் (விசாரணை) சட்டம், 1968-இன் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவைத் தலைவர் நிராகரித்தார்' எனத் தெரிவிக்கப்பட்டது.


உலகின் பல ஜனநாயக நாடுகளில் வாக்களிக்கும் வயது 18-ஆக உள்ள நிலையில், இந்தியாவில் வாக்களிக்கும் வயதை 18-ஆக குறைக்க பிரபல சட்ட அறிஞர் வி.எம்.தார்குண்டே தலைமையிலான குழு பரிந்துரை செய்தது. அதன் பின்னர், இந்திய அரசமைப்பின் 61-வது சட்டத் திருத்த 1988-ன் படி வாக்களிக்கும் வயது 18 ஆனது. இந்த சட்டம் 1988-இல் நிறைவேற்றப்பட்டாலும் 1989-ஆம் ஆண்டு மார்ச் 28-ஆம் தேதிதான் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் மூலம் இளம் தலைமுறை வாக்காளர்கள் தங்களின் தலைமையைத் தேர்தெடுக்கும் உரிமையைப் பெற்றனர்.

பண்டைய குடவோலை முறை என்று அறியப்பட்ட பானை வாக்கு முறையில் தேர்தல் நடைமுறை தொடங்கியிருப்பினும், தற்போது உள்ள தேர்தல் நடைமுறை முதலில் வித்திடப்பட்டது 1920-இல் நடைபெற்ற நேரடி பொதுத் தேர்தல் மூலம்தான். இதற்குக் காரணமானது மாண்டேகு-செம்ஸ்போர்டு குழுவின் பரிந்துரை. அதன் அடிப்படையில் நடைபெற்ற நாட்டின் முதல் நேரடித் தேர்தலில் பெண்கள் வாக்களிக்கவும் போட்டியிடவும் உரிமையற்றவர்களாய் இருந்தனர்.

## 2. National News

| | |
|---|---|
| ❖ Odisha Police and Uttarakhand Police have been awarded the President's Police Colour, the highest honour for police forces in India. | ❖ ஒடிசா காவல்துறை மற்றும் உத்தரகாண்ட் காவல்துறைக்கு, இந்தியக் காவல் படைகளுக்கான மிக உயரிய விருதான குடியரசுத் தலைவர் காவல் வண்ண விருது வழங்கப்பட்டுள்ளது. |




| | |
|---|---|
| ❖ Union Defence Minister commissioned the advanced stealth frigate INS Taragiri in Visakhapatnam, Andhra Pradesh, which is the fourth stealth frigate under Project 17A of the Indian Navy. | ❖ இந்தியக் கடற்படையின் ப்ராஜெக்ட் 17A திட்டத்தின் கீழ் நான்காவது ஸ்டெல்த் போர்க்கப்பலான ஐ.என்.எஸ் தரகிரியை, ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஆணையிட்டு வைத்தார். |




| | |
|---|---|
| ❖ INS Aridaman, India's 3rd nuclear-powered submarine, has been inducted into the Indian Navy. | ❖ இந்தியாவின் மூன்றாவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ் அரிதமான், இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது. |



| | |
|---|---|
| **INS Sunayna – IOS SAGAR Maritime Mission**<br>❖ INS Sunayna has been deployed as the Indian Ocean Ship (IOS) under the SAGAR mission to strengthen maritime cooperation in the Indian Ocean Region.<br>❖ The mission was flagged off from Mumbai amid rising tensions in West Asia and disruptions in key global sea routes like the Strait of Hormuz.<br>❖ It aims to promote maritime safety, freedom of navigation, and stability through multilateral cooperation in the Indian Ocean Region. | **ஐஎன்எஸ் சுனய்னா – ஐஓஎஸ் சாகர் கடல்சார் திட்டம்**<br>❖ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் சாகர் திட்டத்தின் கீழ், ஐஎன்எஸ் சுனய்னா இந்தியப் பெருங்கடல் கப்பலாக (ஐஓஎஸ்) பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.<br>❖ மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதட்டங்கள் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி போன்ற முக்கிய உலகளாவிய கடல் வழித்தடங்களில் ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கு மத்தியில், இத்திட்டம் மும்பையிலிருந்து கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.<br>❖ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பலதரப்பு ஒத்துழைப்பின் மூலம் கடல்சார் பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்திற்கான சுதந்திரம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். |




| | |
|---|---|
| Karnataka has the highest number of women Self-Help Groups (SHGs – Self Help Groups) trained as drone pilots under Namo Drone Didi Yojana. | நமோ ட்ரோன் திதி யோஜனா திட்டத்தின் கீழ் ட்ரோன் பைலட்டுகளாகப் பயிற்சி பெற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களின் (SHG) |

| | |
|---|---|
| | எண்ணிக்கை கர்நாடகாவில் மிக அதிகமாக உள்ளது. |




| | |
|---|---|
| **Khelo India Tribal Games 2026**<br>❖ Khelo India Tribal Games concluded in Chhattisgarh, where Karnataka emerged as the overall champion in the medal tally.<br>❖ The Games were organised to promote sports among tribal communities and to identify, nurture, and showcase indigenous sporting talent from across India. | கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026<br>❖ சத்தீஸ்கரில் நிறைவடைந்த கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகளில், பதக்கப் பட்டியலில் கர்நாடகா ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்தது.<br>❖ பழங்குடியினர் சமூகத்தினரிடையே விளையாட்டை ஊக்குவிக்கவும், இந்தியா முழுவதிலுமிருந்து பழங்குடியின விளையாட்டுத் திறமைகளைக் கண்டறிந்து, வளர்த்து, வெளிப்படுத்தவும் இந்த விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. |



MEDAL TALLY

| RANK | STATE | Gold | Silver | Bronze | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | KARNATAKA | 23 | 8 | 7 | 38 |
| 2 | ODISHA | 21 | 15 | 21 | 57 |
| 3 | JHARKHAND | 16 | 8 | 11 | 35 |
| 12 | NAGALAND | 2 | 2 | 3 | 7 |




## 3. TN State News

### சர்க்கரை நோய் ஆராய்ச்சிக் கழக தமிழ்நாடு தலைவராக டாக்டர் அ.பன்னீர்செல்வம் தேர்வு



**சென்னை, ஏப். 6:** சர்க்கரை நோய் ஆய்வுகளுக்கான இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் (ஆர்எஸ்எஸ்டிஐ) தமிழ்நாடு தலைவராக சர்க்கரை நோய் சிறப்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் அ.பன்னீர்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உலக அளவில் புகழ்பெற்ற அமெரிக்க சர்க்கரை நோய் அமைப்பைக் காட்டிலும், அதிக உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக இந்தியாவின் ஆர்எஸ்எஸ்டிஐ விளங்கி வருகிறது. கடந்த 1972-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்த அமைப்பில் நாடு முழுவதும் 10,000-க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழக பிரிவில் மட்டும் 1,300 மருத்துவர்கள் உள்ளனர். ஆண்டுதோறும் அந்த அமைப்புக்கு புதிய தலைவரைத் தேர்வு செய்வது வழக்கம்.

அந்த வகையில், திருச்சியில் அண்மையில் ஆர்எஸ்எஸ்டிஐ அமைப்பின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய தலைவராக டாக்டர் அ.பன்னீர்செல்வம் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். அடுத்த ஓராண்டுக்கு அவர் அப்பொறுப்பை வகிப்பார்.

சர்க்கரை நோய் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு, அதற்கான சிகிச்சைகளை மேம்படுத்துவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே ஆர்எஸ்எஸ்டிஐ அமைப்பின் பிரதான நோக்கம் என டாக்டர் அ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

### 9 காவலர்களுக்கு மரண தண்டனை

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் தீர்ப்பு | தமிழக வரலாற்றில் முதல்முறை

#### தமிழக வரலாற்றில் முதல்முறை

காவல் நிலைய மரண வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட காவலர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இதை இந்த வழக்கில் முன்னிலையான வழக்குரைஞர்கள் உறுதி செய்தனர்.

காவலர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்த பிறகு, நீதிபதி முத்துக்குமரன் இருக்கையிலிருந்து எழும் முன்பாக தனது பேனா முனையை மேஜையில் குத்தி உடைத்தார்.








## 4. PRACTICAL MCQ'S

| | |
|---|---|
| Where were the Khelo India Tribal Games 2026 concluded, and which state emerged as the overall champion?<br><br>A) Odisha – Maharashtra<br>B) Chhattisgarh – Karnataka<br>C) Jharkhand – Gujarat<br>D) Madhya Pradesh – Tamil Nadu | கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுப் போட்டிகள் 2026 எங்கு நிறைவடைந்தன, மற்றும் எந்த மாநிலம் ஒட்டுமொத்த சாம்பியனாக உருவெடுத்தது?<br>அ) ஒடிசா – மகாராஷ்டிரா<br>ஆ) சத்தீஸ்கர் – கர்நாடகா<br>இ) ஜார்கண்ட் – குஜராத்<br>ஈ) மத்தியப் பிரதேசம் – தமிழ்நாடு |
| Which state has the highest number of women Self-Help Groups (SHGs) trained as drone pilots under the Namo Drone Didi Yojana?<br><br>A) Tamil Nadu<br>B) Maharashtra<br>C) Karnataka<br>D) Gujarat | நமோ ட்ரோன் திதி யோஜனாவின் கீழ் ட்ரோன் பைலட்டுகளாகப் பயிற்சி பெற்ற அதிக எண்ணிக்கையிலான மகளிர் சுய உதவிக் குழுக்களைக் (SHG) கொண்ட மாநிலம் எது?<br><br>A) தமிழ்நாடு<br>B) மகாராஷ்டிரா<br>C) கர்நாடகா<br>D) குஜராத் |
| INS Sunayna has been deployed under which mission to strengthen maritime | இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்த, ஐஎன்எஸ் சுனய்னா எந்தத் |

| | |
|---|---|
| cooperation in the Indian Ocean Region?<br><br>A) Mission Shakti<br>B) Project Mausam<br>C) SAGAR Mission<br>D) Blue Economy Mission | திட்டத்தின் கீழ் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது?<br><br>A) மிஷன் சக்தி<br>B) ப்ராஜெக்ட் மௌசம்<br>C) சாகர் திட்டம்<br>D) நீலப் பொருளாதாரத் திட்டம் |
| Which police forces have been awarded the President's Police Colour, the highest honour for police forces in India?<br><br>A) Delhi Police and Punjab Police<br>B) Odisha Police and Uttarakhand Police<br>C) Kerala Police and Tamil Nadu Police<br>D) Gujarat Police and Rajasthan Police | இந்தியக் காவல் படைகளுக்கான மிக உயர்ந்த கௌரவமான குடியரசுத் தலைவர் காவல் வண்ண விருதை எந்தெந்தக் காவல் படைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது?<br>A) டெல்லி காவல்துறை மற்றும் பஞ்சாப் காவல்துறை<br>B) ஒடிசா காவல்துறை மற்றும் உத்தரகாண்ட் காவல்துறை<br>C) கேரளா காவல்துறை மற்றும் தமிழ்நாடு காவல்துறை<br>D) குஜராத் காவல்துறை மற்றும் ராஜஸ்தான் காவல்துறை |
| **Q.** INS Aridaman, recently inducted into the Indian Navy, is which type of vessel?<br><br>A) Aircraft Carrier<br>B) Destroyer<br>C) Frigate<br>D) Nuclear-powered Submarine | சமீபத்தில் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்ட ஐஎன்எஸ் அரிதமன் எந்த வகைக் கப்பல்?<br><br>அ) விமானம் தாங்கி கப்பல்<br>ஆ) அழிப்புக் கப்பல்<br>இ) போர்க்கப்பல்<br>ஈ) அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் |

## 5. REVISION




எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனின், 'தமிழ் சிறுகதையின் தடங்கள்' என்ற இலக்கிய விமர்சன நூலுக்கு, தமிழ் மொழிக்கான, சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.

## முதல் தேவாங்கு பாதுகாப்பு மையம்

இந்தியாவின் முதல் தேவாங்கு பாதுகாப்பு மையம் திண்டுக்கல் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டது.

## உடன்குடியில் அனல்மின் நிலையம்

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் சார்பில், தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13,077 கோடி செலவில் தலா 660 மெகாவாட் மின் உற்பத்தி திறனுடன் 2 அலகுகள் கொண்ட மிக உய்ய அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## முதல் இரவு வான்வெளி பூங்கா



- நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மாநிலத்தின் முதல் இரவு வான்வெளி பூங்கா தொடங்கப்பட்டுள்ளது.
- அரியூர் சோலை காப்புக்காடு பகுதியில் அமைந்துள்ள இந்தப் பூங்காவை, வனத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் திறந்து வைத்தார்.
- இந்தப் பூங்காவில் விண்மீன்களை உற்று நோக்குவதற்காக மூன்று நவீன தொலைநோக்கிகள் நிறுவப்பட்டுள்ளன.
- பூங்காவிற்குத் தேவையான மின்சாரம் முழுவதும் சூரிய ஒளித் தகடுகள் மூலம் பெறப்படுவது இதன் கூடுதல் சிறப்பாகும்.
- இரவு நேரங்களில் தங்கி வான்வெளியைப் பார்க்க விரும்புபவர்களுக்கு 'ஆகாய கங்கை' சூழல் குடிசைகளில் (Eco-huts) தங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. (பிப்ரவரி 27)

# ஏப்ரல் மாத முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| ஏப்ரல் 2 – உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம் | ஏப்ரல் 2 – சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் |
| ஏப்ரல் 5 – தேசிய கடல்சார் தினம் | ஏப்ரல் 7 – உலக சுகாதார தினம் |
| ஏப்ரல் 11 – சர்வதசே உடல் தளர்ச்சி நோய் தினம் | ஏப்ரல் 11 – தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் |
| ஏப்ரல் 12 – மனித விண்வெளி பயணத்தின் சர்வதேச தினம் | ஏப்ரல் 12 – சர்வதேச தெரு குழந்தைகள் தினம் |
| ஏப்ரல் 16 – உலக தொழில் முனைவோர் தினம் | ஏப்ரல் 17 – உலக ஹீமோபிலியா தினம் |
| ஏப்ரல் 18 – உலக பாரம்பரிய தினம் | ஏப்ரல் 21 – உலக படைப்பாற்றல் மற்றும் புதுமை தினம் |
| ஏப்ரல் 21 – தேசிய சிவில் சேவை தினம் | ஏப்ரல் 22 – உலக பூமி தினம் |
| ஏப்ரல் 23 – உலக புத்தகம் மற்றும் காப்புரிமை தினம் | ஏப்ரல் 24 – தேசிய பெண்களுக்கு அரசியல் அதிகாரமளித்தல் தினம் |
| ஏப்ரல் 24 – தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் | ஏப்ரல் 25 – உலக மலேரியா தினம் |
| ஏப்ரல் 26 – உலக அறிவுசார் சொத்துரிமை தினம் | ஏப்ரல் 28 – சர்வதேச வேலைநேர பாதுகாப்பு மற்றும் சுகாதார தினம் |
| ஏப்ரல் 29 – உலக நோய் தடுப்பாற்றல் தினம் | ஏப்ரல் 30 – இரசாயனப் போரில் பாதிக்கப்பட்டோரின் நினைவு தினம் |